சலுகைகள்யெல்லாம் பரமக்குடியிலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அந்தச் சலுகையை பயன்படுத்திக் கொண்டு அங்கே இருக்கிற தொழில் முனைவர்களை அழைத்து, அந்தச் சலுகையை பயன்படுத்தி அங்கே தொழில்களை துவங்குவதற்கு, மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, திரு. ஓ. எஸ். அமர்நாத், இருக்கையில் இல்லை.

வினா எண் 71, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

71—

நூற்பாலைகளில் வேலை வாய்ப்பு

*★ **65098** திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்யும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா:- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று கூறினார்கள். அதற்காக எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். புவியில் பெண்களின் தனிப்பெரும் தலைவியாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், பெண்கள் சமுதாயத்தில் எங்கும் பெண்கள், எதிலும் பெண்கள் என்ற நிலையை அடைந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இதுபோன்ற மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளிலும் பெண்களை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்து, எந்தெந்த பணிகளுக்கு பெண்களை நியமிக்க அரசு ஆவன செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் *1958*-லேயே

1996 பிப்ரவரி 20]

ஆரம்பிக்கப்பட்டதால் பெண்கள் யாரும் இப்பணிகளுக்கு வருவதற்கு முன்வரவில்லை. மேலும் கூட்டுறவு நூற்பாலைகள் 3 ஷிப்டுகளாக இயங்கி வருவதால், தொழிற்சாலைகளுடைய சட்டப்படி 1948 பிரிவு 66-ன்படி பெண்களை இரவு நேர பணிகளுக்கு அமர்த்தக் கூடாது. கடுமையான, அபாயகரமான இயந்திரங்கள் உள்ள பிரிவுகளிலெல்லாம், நாள் முழுவதும் நின்று கொண்டே பணிபுரிய வேண்டியுள்ள பிரிவுகளிலெல்லாம், பெண்கள் பணிபுரிவது கடினம் என்கின்ற காரணத்தினாலே எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் காண வேண்டும் என்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரீலீங், பேக்கிங் ஆகிய இடங்களில் காலி பணியிடங்கள் ஏற்படும்போது அங்கே பெண்களையே நியமிக்க வேண்டும் என்று உத்தரவளித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரீலிங் மற்றும் பேக்கிங் ஆகிய வேலைகளுக்கு மட்டும்தான் பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்தார்கள். தனியார் நூற்பாலைகளில் யான் வைண்டிங் மற்றும் தரம் பிரிக்கின்ற ராட்டிங் செக்ஷன் போன்றவற்றில் எல்லாம் பெண்களை ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு மேலும் இந்த ஸ்பின்னிங் சம்பந்தமாக பிரத்தியேகமாக உயர் படிப்பு படித்த பெண்கள் பெரும் அளவில் வந்து கொண்டிருப்பதால் அப்படிப்பட்ட பெண்களை நியமிப்பதன் மூலம் இந்த நலிவுற்ற நூற்பாலைகள் வலிவுபெறும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த மிகப் பெரிய உயர் பதவிகளிலும் பெண்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் பதவிகளில் காலி பணியிடம் ஏற்படும்போது பெண்கள் அதற்கு நியமிக்கப்படுகின்ற தகுதியிருப்பின் நியமிக்கப்படுவார்கள். ஆனால் தொழிற்சாலை சட்டப்படி அபாயகரமான பணிகளில் அவர்களை ஈடுபடுத்தக் கூடாது என்பதும் இரவு நேர ஷிப்டுகளில் பெண்களை ஈடுபடுத்தக் கூடாது என்பதும் இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பணிகளிலே அவர்கள் ஈடுபடுத்தப்படுவதில்லை. உயர் பதவிகள் மேனேஜ்மெண்ட் போன்ற பதவிகள் வருகின்றபோது பெண்கள் நிமிக்கப்படுகிறார்கள். இப்போதும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் எனபதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[1996 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே பெண்களுக்கு என்று முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு இட ஒதுக்கீட்டிலும், வேலை வாய்ப்புகளிலும் கல்லூரிகளிலும் சிறப்பாக முன்னுரிமை வழங்கிவரும் நம்முடைய இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தனியார் ஆலைகளிலே ரீலிங், வைண்டிங், பேக்கிங் போன்ற துறைகளில் இன்றைய தினம் பெண்கள் பணியாற்றிவரும் அந்த பணி இடங்களை அந்த செக்ஷனை நிறுத்தி விட்டு அந்தப் பெண்களுக்கு வேலை இழப்பு ஏற்படுவதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனித்து நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது லேபர் மினிஸ்டரிடம் கேட்க வேண்டிய கேள்வியாகும். எங்களை பொறுத்தமட்டில் ரீலிங், பேக்கிங் ஆகியவற்றில் தொழிற்சாலை சட்டப்படி இதில் பெண்கள் நியமிக்கப்படுகிறார்கள். தனியார் கூட்டுறவு நூற்பாலைகளில் அப்படி தவறு நடக்குமானால் அது தொழிலாளர் நல சட்டத்தின் கீழ் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது முதலாளியாக அவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் தொழில் தகராறை தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடம்தான் கேட்க வேண்டும்.

வினா எண் 72, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

72—

குத்தாலம் தொகுதியில் பள்ளி துவங்குதல்

*** 45033** *திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், 83, செங்குடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியோ அரசுப்பள்ளியோ இல்லாததை அரசு அறியுமா?